2025 ஆகஸ்ட்  மாதம் 03 – ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர்     :  144/2022

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 – ஆம் தேதி புதன்கிழமை 3ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW1 நபரின் வாக்கு மூலம் (1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW1 – வைரமுத்து |
| தந்தை பெயர்: | ராமர் |
| ஊர்: | தாடிச்சேரி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஓட்டுநர் |
| வயது : | 57 |

தேதி : 03.09.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. கடந்த 19.05.2022ம் தேதி TN 60 AA 9821 என்ற பதிவு எண் கொண்ட பேருந்தை ஓட்டிச்சென்றேனா என்றால் ஓட்டிச்சென்றேன். பாலசித்தி விநாயகர் கோவில் அருகே செல்லும்போது TN 60 AW 4755 என்ற பதிவு எண் கொண்ட இருச்சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, என் வண்டிமீது மோதவில்லை. விபத்து சமயத்தில் பேருந்தை மெதுவாகவும், கவனமாகவும் ஓட்டிச்சென்றேன். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்தவரின்

கவனக்குறைவால் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் தலைகவசம் அணிந்திருந்தாரா என்றால் இல்லை.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் நான் ஓட்டுநராக வேலை பார்த்த L.S.Mill உரிமையாளர் தேனி மாவட்டத்தில் செல்வாக்குமிக்க நபர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பேருந்தை ஓட்டிச்சென்றேன் என்றால் சரிதான். விபத்து நடைபெற்றவுடன் நான் பேருந்தை நிறுத்திவிட்டு, நான் சின்னமனூர் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். விபத்தில் என்மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சின்னமனூர் காவல் நிலையத்தில் இருக்கும்போது எனது நிறுவனத்தின் அதிகாரிகள் காவல் நிலையம் வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் வந்தபின்னரே என்னை காவல்நிலைய பிணையில் வெளியே விட்டார்கள் என்றால் சரிதான். விபத்திற்கு பிறகு பேருந்தை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தி, பின்னர் சின்னமனூர் காவல் நிலையத்தில் ஆஜர்படுத்திய பின்னர், எங்கள் நிறுவனத்திற்கு பேருந்தை எடுத்துச் சென்றோம் என்றால் சரிதான். நான் பயணிகளை இறக்கிவிட்டு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அடுத்த ஸ்டாப்பை நோக்கி நான் சென்றுக்கொண்டிருக்கும்போது இருச்சக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் பேருந்தின் வலதுப்பக்க டயர் ஏர் இறங்கியதில் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது என்றால் சரிதான், இருச்சக்கர வாகனம் நான் ஓட்டிவந்த பேருந்தின் மீது மோதவில்லை, முன்னால் சென்ற வாகனத்தின்மீது மோதியதில் இருச்சக்கர வாகனம் கீழே கிடந்தது, இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் என்னுடைய பேருந்தின் வலதுபுற டயர்பக்கம் உள்ளே விழுந்துவிட்டார். இருச்சக்கர வாகனத்தின்மீது மோதியதாக சொல்லக்கூடிய வண்டியின் பதிவு எண் எனக்கு தெரியாது. இருச்சக்கர வாகனம் அவ்வாறு மோதவில்லை என்பதால் அதனுடைய எண்

எனக்கு தெரியாது, என்னுடைய வாகனம் தான் மோதி விபத்தை ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. என்னுடைய வாகனத்திற்கு சேதாரம் எதுவும் ஏற்படவில்லை. நான் முன்நோக்கி தான் வாகனத்தை ஓட்டுவேன் என்றால் சரிதான், அதனால் பின்னால் ஏற்பட்ட விபத்தை நான் பார்க்க முடியாது என்றால் பேருந்தின் இரண்டு ஓரமும் உள்ள கண்ணாடிகள் வழியே நான் விபத்தை பார்த்தேன். இருச்சக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து பயணம் செய்தவருக்கும் என்னுடைய பேருந்தின்மீது மோதியதால் தான் கொடுங்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நானோ, என்னுடைய நிறுவனமோ விபத்தானது எங்களுடைய பேருந்தினால் விபத்து ஏற்படவில்லை என்று சின்னமனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. விபத்திற்கு முழு காரணம் நான் என்பதால் தான் நானோ, என்னுடைய நிறுவனமோ சின்னமனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். குற்ற வழக்கானது உத்தமபாளையம் நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகிறது என்றால் சரிதான். பேருந்தின் இரண்டு ஓரபுறமாக கண்ணாடிகளில் தரையிலிருந்து 6 அடி உயரத்தில் தெரியவரும் என்றால் சரிதான். எனவே இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் தலைகவசம் அணிந்து தான் வந்தார் என்றும், என்னால் பேருந்து ஓரக்கண்ணாடி வழியாக அதனை பார்ப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் தலைகவசம் அணியவில்லை என்று நான் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. MCOP.144/2022 இந்த வழக்கு சம்பந்தமாக இன்சூரன்ஸ் கம்பெனி புலனாய்வு அதிகாரி என்னை அவர் விசாரணை செய்யும்போது, இருச்சக்கர வாகனத்தில் இருந்த நபர் தலைகவசம் அணியவில்லை என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு முழு காரணம் பேருந்தை ஓட்டிவந்த ஓட்டுநரானஎன்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் காப்பீட்டு

நிறுவனம் என்னுடைய பேருந்திற்கு காப்பீட்டு செய்யப்பட்டு, ஊர்ஜிதத்தில் இருந்ததால் மனுதாரர்களுக்கு நான் மற்றும் எங்களது நிறுவனம், காப்பீட்டு நிறுவனம் சேர்ந்து கூட்டாக இழப்பீடு தொகை கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 03.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.03 18:52:22 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC). தேனி.
03.09.2025